ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி

# 9.7 – எங்கானல்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 9.7 – எங்கானல்

‡ எம் கானல் அகம் கழிவாய் ⋆
இரை தேர்ந்திங்கினிதமரும் ⋆
செங்கால மட நாராய் ! ⋆
திருமூழிக்களத்துறையும் ⋆
கொங்கார் பூந் துழாய் முடி ⋆
எம் குடக்கூத்தர்க்கென் தூதாய் ⋆
நும் கால்கள் என் தலை மேல் ⋆
கெழுமீரோ நுமரோடே ‖ **9.7.1** ‖

நுமரோடும் பிரியாதே ⋆
நீரும் நும் சேவலும் ஆய் ⋆
அமர் காதல் குருகினங்காள் ⋆
அணி மூழிக்களத்துறையும் ⋆
எமராலும் பழிப்புண்டு ⋆
இங்கென் தம்மால் இழிப்புண்டு ⋆
தமரோடங்குறைவார்க்குத் ⋆
தக்கிலமே கேளீரே ‖ **9.7.2** ‖

தக்கிலமே கேளீர்கள் ⋆
தடம் புனல் வாய் இரை தேரும் ⋆
கொக்கினங்காள் குருகினங்காள் ! ⋆
குளிர் மூழிக்களத்துறையும் ⋆
செக்கமலத்தலர் போலும் ⋆

கண் கை கால் செங்கனிவாய் ⋆
அக்கமலத்திலை போலும் ⋆
திருமேனி அடிகளுக்கே ॥ **9.7.3** ॥

திருமேனி அடிகளுக்கு ⋆
தீ வினையேன் விடு தூதாய் ⋆
திருமூழிக்களம் என்னும் ⋆
செழு நகர் வாய் அணி முகில்காள் ⋆
திருமேனி அவட்கருளீர் ⋆
என்றக்கால் ⋆
உம்மைத் தன் திருமேனி ஒளி அகற்றித் ⋆
தெளி விசும்பு கடியுமே ॥ **9.7.4** ॥

தெளி விசும்பு கடிதோடித் ⋆
தீ வளைத்து மின் இலகும் ⋆
ஒளி முகில்காள் ! ⋆
திருமூழிக்களத்துறையும் ஒண் சுடர்க்கு ⋆
தெளி விசும்பு திருநாடாத் ⋆
தீ வினையேன் மனத்துறையும் ⋆
துளி வார் கள் குழலார்க்கு ⋆
என் தூதுரைத்தல் செப்புமினே ॥ **9.7.5** ॥

தூதுரைத்தல் செப்புமின்கள் ⋆
தூ மொழி வாய் வண்டினங்காள் ⋆
போதிரைத்து மது நுகரும் ⋆
பொழில் மூழிக்களத்துறையும் ⋆
மாதரைத் தம் மார்வகத்தே ⋆
வைத்தார்க்கென் வாய் மாற்றம் ⋆

தூதுரைத்தல் செப்புதிரேல் ⋆
சுடர் வளையும் கலையுமே ‖ **9.7.6** ‖

சுடர் வளையும் கலையும் கொண்டு ⋆
அரு வினையேன் தோள் துறந்த ⋆
படர் புகழான் ⋆
திருமூழிக்களத்துறையும் பங்கயக் கண் ⋆
சுடர் பவள வாயனைக் கண்டு ⋆
ஒரு நாள் ஓர் தூய் மாற்றம் ⋆
படர் பொழில் வாய்க் குருகினங்காள் ! ⋆
எனக்கொன்று பணியீரே ‖ **9.7.7** ‖

எனக்கொன்று பணியீர்கள் ⋆
இரும் பொழில் வாய் இரை தேர்ந்து ⋆
மனக்கின்பம் பட மேவும் ⋆
வண்டினங்காள் ! தும்பிகாள் ⋆
கனக்கொள் திண் மதிள் புடை சூழ் ⋆
திருமூழிக்களத்துறையும் ⋆
புனக்கொள் காயா மேனிப் ⋆
பூந் துழாய் முடியார்க்கே ‖ **9.7.8** ‖

பூந் துழாய் முடியார்க்குப் ⋆
பொன் ஆழிக் கையாருக்கு ⋆
ஏந்து நீர் இளம் குருகே ! ⋆
திருமூழிக்களத்தார்க்கு ⋆
ஏந்து பூண் முலைப் பயந்து ⋆
என் இணை மலர்க் கண் நீர் ததும்ப ⋆

தாம் தம்மைக் கொண்டகல்தல் ⋆
தகவன்றென்றுரையீரே ‖ **9.7.9** ‖

தகவன்றென்றுரையீர்கள் ⋆
தடம் புனல் வாய் இரை தேர்ந்து ⋆
மிக இன்பம் பட மேவும் ⋆
மென் நடைய அன்னங்காள் ⋆
மிக மேனி மெலிவெய்தி ⋆
மேகலையும் ஈடழிந்து ⋆
என் அகமேனி ஒழியாமே ⋆
திருமூழிக்களத்தார்க்கே ‖ **9.7.10** ‖

‡ ஒழிவின்றி திருமூழிக்களத்துறையும் ⋆
ஒண் சுடரை ⋆
ஒழிவில்லா அணி மழலைக் ⋆
கிளி மொழியாள் அலற்றிய சொல் ⋆
வழுவில்லா வண் குருகூர் ⋆
சடகோபன் வாய்ந்துரைத்த ⋆
அழிவில்லா ஆயிரத்து ⋆
இப் பத்தும் நோய் அறுக்குமே ‖ **9.7.11** ‖

அடிவரவு — எங்கானல் நுமரோடும் தக்கிலமே திருமேனி தெளிவிசும்பு தூதுரைத்தல் சுடர்வளையும் எனக்கு பூந்துழாய் தகவன்று ஒழிவின்றி அறுக்கும்

எங்கானல் முற்றிற்று

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்